கைவசம் இல்லாவிட்டால் யாரிடமாவது பெறவேண்டும். அப்படி அதை வழங்குவதற்கு யாரும் வராதபொழுது, யாரைக் கொண்டாவது ரத்தம் தரக்கூடியவர்களை அழைத்து வரவேண்டிய நிலைமை பல இடங்களில் ஏற்படுகிறது.

சென்னை விமான நிலையம்

*246 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்தக் கோரி மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இல்லை. இருந்தபோதிலும் இந்திய அனைத்து நாட்டு விமான நிலையங்கள் அதிகாரமன்ற இயக்குநர் இவ்வரசுக்குப் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

உள்நாட்டு விமானப் போக்குவரத்து, அனைத்து நாட்டு விமானப் போக்குவரத்து ஆகிய இவ்விரு தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் தற்போதுள்ள விமானப் பயண முனைக்கட்டிடத்தில் (Terminal building) சில முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. இப்பணிக்கு ரூ. 41 லட்சத்திற்கு மேல் செலவாகியது. விமான ஓடு பாதைகள் தரை ஓட்டப் பாதைகள் (Taxi-tracks) விமான தள ஓரப்பாதைகள் (Apron) முதலியவற்றிலும் முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. சென்னை விமான தள மேம்பாட்டிற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் நான்காண்டுகளில் மொத்தம் ரூ. 175 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1973-74-ல் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டுதல் உட்பட சென்னை விமான தளத்தில் நடைபாதைகள், விமானப்பயண முனைக்கட்டிடம், சாலைகள் வெளிப்புறப் பணி வசதிகள், துணை வசதிக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு மேம்பாடுகள் செய்யவும் ஏனைய பல்வகைப் பணிகளை நிறைவேற்றவும் இந்திய அனைத்து நாட்டு விமான நிலையங்கள் அதிகார மன்றத்திடம் திட்டங்கள் உள்ளன. இத்திட்டங்களை நிறைவேற்ற ரூ. 84.92 லட்சம் அளவிற்குச் செலவாகும்.

2. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் பல மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் இந்திய அனைத்து நாட்டு விமான நிலையங்கள் அதிகார மன்றம் கருதுகிறது. இவற்றுக்குரிய விரிவான விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

1974 சனவரி 30]

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சென்னை விமான நிலையத்தில் போதிய வருவாய் இல்லை, நிறைய பாசஞ்சர்கள் இல்லை என்ற காரணத்தால் அதை விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை என்று மத்திய அரசு இலாக்காவிற்கு தெரிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விமான நிலையங்கள் அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் ஏற்படுத்தி போக்குவரத்தை அதிகரிப்பதன் மூலம் வருவாயை பெருக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் விமான நிலையம் அமைக்க நமது அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னை விமான நிலையம் நட்டத்தில் இருப்பதாகக் தகவல் இல்லை. மேலும், மாவட்டத் தலைநகரங்களில் விமான நிலையங்களை ஏற்படுத்தினால் மேலும் நட்டம் ஏற்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னை விமான நிலையம் ஒரு இண்டர் நேஷனல் ஏர்போர்ட்டாக ஆகிவிட்டது. மற்ற நாடுகளில் இண்டர்நேஷனல் ஏர்போர்ட்டுகள் எவ்வளவோ விரிவாக இருக்கின்றன. டெல்லி விமான நிலையத்தைக் கூட விரிவாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்த மத்திய சர்க்காரை அரசு கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே,

The International Airports Authority of India has schemes to the tune of Rs. 84.92 lakhs to carry out improvements to the pavements, terminal building, etc. ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும்போது இண்டர்நேஷனல் ஏர்போர்ட் ஆக சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன்: எல்லா மாவட்டங்களிலும் விமான நிலையம் ஏற்பட வாய்ப்பில்லாவிட்டாலும், சேலம் மாவட்டத்தில் சேலம் ஸ்டீல் பிளாண்ட், இன்னும் மற்றும் பல தொழிற்சாலைகள் வர இருக்கின்ற காரணத்தால், சேலத்தில் ஒரு விமான நிலையத்தை ஏற்படுத்த முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)